செய்தி வெளியீடு எண்: 868 நாள்: 07.10.2010.

## <u>மாற்றுத் திறனாளி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊர்திப்படி 300/– ரூபாய் என்பதை 1000/– ரூபாயாக உயர்த்தி</u>

## <u>மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>

அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஊர்திப்படி மாதம் 150/– ரூபாய் என்பது 1–6–2009 முதல் 300 ரூபாயாக உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் ஏற்கெனவே ஆணையிட்டு, அதன்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊர்திப் படி 300/– ரூபாய் என்பதை, 1–10–2010 முதல் மாதம் 1,000/– ரூபாயாக மேலும் உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (7–10–2010) ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, ஏறத்தாழ 10 ஆயிரம் மாற்றுத் திறனாளிப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்; அரசுக்கு ஆண்டொன்றுக்கு 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

* * * * * *